செ.வெ.எண்.16 நாள்.18.07.2020

# பத்திரிகை செய்தி

## கடலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

-------

கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்திர சேகர் சாகமூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் அவர்கள் தலைமையில் இன்று (18.07.2020) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் தெரிவித்ததாவது.**

கடலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் துரித நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வைரஸ் தொற்று பரவாமல் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மாவட்டத்தில் கொரோனா தொற்று பரிசோதனை முடிவுகள் 24 மணி நேரத்தில் கிடைக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டத்தில் அதிகமாக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு கொரோனா தொற்று ஏற்படாத வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சுமார் 9000 நபர்களுக்கு மேல் கபசுர குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

கிராம கண்காணிப்புக்குழு மூலம் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் நோய்தொற்றுக்குள்ளானவர்களின் குடும்பங்களுக்கும், அவர்களை சார்ந்தவர்களுக்கும் அத்தியாவசிய தேவைகளான உணவுபொருட்கள் வழங்கியும், மருத்துவக்குழுக்கள் சிறப்பாக அவர்களை கண்காணித்து வருகின்றனர். கொரோனா நிவாரணத்தொகை தலா ரூ.1000 வீதம் இதுவரை 27000 மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

5 நகராட்சிகள், 16 பேரூராட்சிகள் மற்றும் 683 ஊராட்சிகளில் 19 தீயணைப்பு வாகனங்கள், 2,895 தூய்மை காவலர்கள், 822 துப்புரவாளர்கள், 102 ஜெட் இயந்திரம் மூலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவசர தேவைகள் மற்றும் உதவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இயங்கிவரும் மருத்துவ கட்டுப்பாட்டு அறை எண்.1077 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு பொதுமக்கள் தங்கள் தகவல்களை தெரிவிக்கலாம். மாவட்டத்தில் 36 பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் கடலூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரிசோதனை 36,278 நபர்களுக்கு எடுக்கப்பட்டுள்ளது. இதில் 1687 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 33,512 நபர்களுக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை. 1079 நபர்களுக்கு முடிவுகள் வரவேண்டியுள்ளது. மேலும் சிகிச்சை மேற்கொள்ளும் அனைவருக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பொதுமக்கள் முககவசம் கட்டாயம் அணிய வேண்டும். சமூக இடைவெளியை பின்பற்றிட வேண்டும். கை கழுவும் பழகத்தினை அனைவரும் கட்டாயமாக்கிக்கொள்ள வேண்டும். அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளித்திட வேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து கடலூர் அண்ணா விளையாட்டரங்கம் அருகில் உள்ள மார்க்கெட் பகுதிகளையும், திருப்பாதிரிபுலியூர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமினையும் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஸ்ரீஅபிநவ்,இகாப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆர்.ராஜகிருபாகரன், கூடுதல் ஆட்சியர் திரு.ராஜகோபால் சுங்கரா,இஆப., கடலூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஜெகதீஸ்வரன், இணை இயக்குநர் (மருத்துவம்) திரு.ரமேஷ்பாபு, துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.கீதா மற்றும் அலுவலர்கள், கலந்து கொண்டனர்.

----------------------------------------------------------------------------------------------------

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர்.